தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(24.06.2023 முதல் 28.06.2023)

அறிக்கைஎண்: 50/2023 தேதி: 23.06.2023

## கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 - 36 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 – 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (24.06.2023 முதல் 28.06.2023).

| கடந்தவாரவானிலை (20.06.2023 முதல் 22.06.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (24.06.2023 முதல் 28.06.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 20/06 | நாள்-2 21/06 | நாள்-3 22/06 | தேதி | நாள்-1 24/06 | நாள்-2 25/06 | நாள்-3 26/06 | நாள்-4 27/06 | நாள்-5 28/06 |
| 0 | 0.9 | 5.7 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 4 | 3 |
| 33 | 36 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 38 | 38 | 38 |
| 27 | 25 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 27 | 27 | 27 | 27 |
| 7 | 7 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 6 | 4 | 6 | 5 |
| 78-56 | 78-65 | 76-49 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-40 | 70-40 | 70-30 | 70-30 | 70-30 |
| 12 | 12 | 15 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 14 | 12 | 12 | 14 | 14 |
| மேற்கு வட மேற்கு | கிழக்கு தென் கிழக்கு | வட மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு | மேற்கு |

## கரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெருபாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 28.06.2023 அன்று லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 37 – 38 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 - 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 - 18 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பயன்படுதுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவக் கூடிய வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த மழை நின்ற பின் டைக்கோபால் 2.5 மி.லி. / லிட்டர் அல்லதுபெனாஜாகுயின் 10 இ.சி 2 மிலி / லிட்டர் என்ற அளவில் 200லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| பருத்தி | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 பிபிம் கரைசலை விதைத்த 60 மற்றும் 90 வது நாளில் தெளிப்பதால் மொட்டுகள் உதிர்வது குறைக்கப்பட்டு காய்கள் அதிகம் பிடிக்க உதவுகிறது. |
| கரும்பு | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக 5 மாதங்களுக்கு மேலான கரும்பு பயிறில் தோகையை நீக்கி விட்டம் கட்டவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும் |

## குறுஞ்செய்தி

வானிலையின் காரணமாக பருத்தியில் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 40 பிபிம் கரைசலை விதைத்த 60 மற்றும் 90 வது நாளில் தெளிக்கவும்.

**இயக்குநர்**